©
GOVERNMENT OF TAMIL NADU
2019

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 1.60 Paise.

TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 29] CHENNAI, WEDNESDAY, JULY 17, 2019
Aadi 1, Vikari, Thiruvalluvar Aandu–2050

Part II—Section 2

Notifications or Orders of interest to a section of the public issued by Secretariat Departments.

NOTIFICATIONS BY GOVERNMENT

CONTENTS

ENVIRONMENT AND FORESTS DEPARTMENT *Pages.*

Tamil Nadu Forests Act: - Appointment of District Forest Officer, Attur Division, *ex-officio* to attend the inquiry

Amendments to Notification 676

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை *Pages.*

Industrial Tribunal for Adjudication 676

Labour Courts for Adjudication 676-677

HOME DEPARTMENT

Motor Vehicles Act - Appointment of certain official as Chairman, State Transport Appellate Tribunal, Chennai 678

Verified RealEstate

NOTIFICATIONS BY GOVERNMENT

ENVIRONMENT AND FORESTS DEPARTMENT.

Appointment of District Forest Officer, Attur Division, *ex-officio to* attend the inquiry under the Tamil Nadu Forest Act.

Amendments to Notification

[G.O.Ms. No. 38, Environment and Forests (FR.14), 5th April 2019, பங்குனி–22, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]

No. II(2)/EF/575/2019.—In exercise of the powers conferred by Section 4 of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882), the Governor of Tamil Nadu hereby makes the following amendment to the Environment and Forests Department Notification No. II(2)/EF/304/2018, published on page 299 of Part II-Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated 28th March 2018.

AMENDMENTS

In the said Notification, for the expression "District Forest Officer, Attur Division, Attur", the expression "District Forest Officer, Salem Division, Salem", shall be substituted.

SHAMBHU KALLOLIKAR,
Principal Secretary to Government.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

Disputes between Workmen and Managements referred to Industrial Tribunal for Adjudication.

எம்.ஆர்.எப் லிமிடெட், திருவெற்றியூர்.

[அரசாணை (டி) எண் 365, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ1)த் துறை, 24 ஜூன் 2019, ஆனி 9, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]

No. II(2)/LE/576/2019.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக எம்.ஆர்.எப், லிமிடெட், என்ற நிர்வாகத்திற்கும் எம்.ஆர்.எப் தொழிலாளர்கள் சங்கம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை சென்னை, தொழிற் தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947 ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, சென்னை, தொழிற் தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947**–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை, தொழிற் தீர்ப்பாயம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு

எழுவினா

"OTR துறையில் Extruder Applicator இயந்திரத்தை தள்ளுவதற்கு இரண்டு ஒப்பந்த தொழிலாளர்களை நிர்வாகம் வழங்கி வந்த நிலையில் **23–11–2015** முதல் அவர்களை விலக்கி கொண்ட செயல் நியாயமானது தானா**?** ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

Disputes between Workmen and Managements, referred to Labour Courts for Adjudication.

பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கரூர் மண்டலம் மற்றும் துணை மேலாளர்– சட்டம் மற்றும் நிர்வாகம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கரூர் மண்டலம்

[அரசாணை (டி) எண் 364, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி2)த் துறை, 24 ஜூன் 2019, ஆனி 9, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]

No. II(2)/LE/577/2019.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கரூர் மண்டலம் மற்றும் துணை மேலாளர் – சட்டம் மற்றும் நிர்வாகம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கரூர் மண்டலம் ஆகிய நிர்வாகங்களுக்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக ஊழியர்கள் சங்கம், கரூர் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற் தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தகராறு, திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும் **1947** ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் **10(2எ)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு

எழுவினாக்கள்

கோரிக்கை எண். 1

திரு. ஆர். சிறும்பண்ணன், ஓட்டுநர் (ப.எண். **5797**) என்பவருக்கு, நிர்வாகம் **1–1–2018** அன்று வழங்க வேண்டிய மூன்றாவது ஆய்வு பலனை வழங்க வேண்டும் என்ற தொழிற் சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா**?** ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

Verified RealEstate™

கரடிபோன் எஸ்டேட் (கரடி குகை எஸ்டேட்), ஏற்காடு, சேலம் மாவட்டம்.

[அரசாணை (டி) எண் 370, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 24 ஜூன் 2019, ஆனி 9, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு—2050.]

No. II(2)/LE/578/2019.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக, கரடிபோன் எஸ்டேட் (கரடி குகை எஸ்டேட்), ஏற்காடு, சேலம் மாவட்டம் என்ற நிர்வாகத்திற்கும், நீலமலை தோட்டத் தொழிலாளர் சங்கம், தோட்டத் தொழிலாளர் இல்லம் எற்காடு, சேலம் மாவட்டம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தகராறு, சேலம், தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும் **1947** ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சேலம் தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு

எழுவினா

ஏற்காடு கரடிபோன் எஸ்டேட் என்ற தோட்டநிறுவனத்தில் பணிபுரிந்து வந்த தொழிற்சங்கத்தின் உறுப்பினர்களான **1.** C. பாப்பு க/பெ. சின்னசாமி, **2.** V. விஜயா க/பெ. வெள்ளமணி, **3.** R. ராஜகுமாரி, க/பெ. ராஜேந்திரன், **4.** V. லதா, த/பெ. வெள்ளையன், **5.** K. கிருஷ்ணமணி, க/பெ. கார்த்தியப்பன். **6.** M. ஜானகி, க/பெ. மாரிமுத்து, **7.** G. தனம். க/பெ. கோவிந்தன் ஆகிய 7 தொழிலாளர்களுக்கு பணிமறுக்கப்பட்ட **21–3–2018** முதல் **24–3–2018** வரையிலான நான்கு நாட்களுக்கு பின்சம்பளமும், பணித்தொடர்ச்சியும் வழங்கப்பட வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா**?** ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், திண்டுக்கல் மண்டலம், திண்டுக்கல்

[அரசாணை (டி) எண் 382, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 28 ஜூன் 2019, ஆனி 13, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு—2050.]

No. II(2)/LE/579/2019.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், திண்டுக்கல் மண்டலம், திண்டுக்கல் என்ற நிர்வாகத்திற்கும், ஆர்எம்டிசி ஒர்க்கர்ஸ் யூனியன் (ஏஐடியுசி), திண்டுக்கல் மாவட்டம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறை நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947 ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தொழிற்தகராறு, திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும் **1947** ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2ஏ)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு

எழுவினா

திரு. பி. கணேசன் ப.எண். **55551** ஓட்டுநருக்கு வருடாந்திர ஊதிய உயர்வினை அதன் திரண்ட பயன்களுடன் இரண்டு **(2)** வருட காலத்திற்கு நிறுத்தம் செய்து நிர்வாகம் வழங்கிய **29–02–2016** நாளிட்ட உத்தரவினை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா**?**

ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட், திண்டுக்கல்

[அரசாணை (டி) எண் 391, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 1 ஜூலை 2019, ஆனி 16, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு—2050.]

No. II(2)/LE/580/2019.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், திண்டுக்கல் மண்டலம், திண்டுக்கல் என்ற நிர்வாகத்திற்கும், ஆர்எம்டிசி ஒர்க்கர்ஸ் யூனியன் (ஏஐடியுசி), திண்டுக்கல் மாவட்டம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறை நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947 ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தொழிற்தகராறு, திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும் **1947** ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2ஏ)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு

எழுவினா

திரு. N. தங்க முனீஸ்வரன், ப.எண் **52464** ஓட்டுனருக்கு வருடாந்திர ஊதிய உயர்வினை அதன் திரண்ட பயன்களுடன் இரண்டு **(2)** வருட காலத்திற்கு நிறுத்தம் செய்து நிர்வாகம் வழங்கிய **22–4–2005** நாளிட்ட உத்தரவினை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா**?**

ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

சுனீல் பாலிவால்,
அரசு முதன்மைச் செயலாளர்.

LATE NOTIFICATIONS:

NOTIFICATIONS BY GOVERNMENT

HOME DEPARTMENT

Appointment of certain Official as Chairman, State Transport Appellate Tribunal, Chennai under the Motor Vehicles Act.

[G.O.(D) No.751, Home (Transport-IV), 9th July 2019, ஆனி 24, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு-2050.]

No.II(2)/HO/581/2019.—In exercise of the powers conferred by sub-section (2) of Section 89 of Motor Vehicles Act, 1988 (Central Act 59 of 1988) the Governor of Tamil Nadu hereby appoints Thiru S.Shunmugavel, District Judge on transfer as Chairman, State Transport Appellate Tribunal, Chennai in the existing vacancy.

NIRANJAN MARDI,
Additional Chief Secretary to Government.

Verified RealEstate™

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU